# திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்002151/ஆ1/2021 நாள். .07.2021

| | |
|---|---|
| பொருள் | தமிழரசு செய்தி இதழ் – செய்தி மக்கள் தொடர்புத்துறை – திருப்பத்தூர் மாவட்டம் – அனைத்து அரசு/அரசு நிதியுதவி / மெட்ரிக் உயர் / மேல்நிலைப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் தமிழரசு செய்தி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இதழ் சந்தாதாரர்கள் சேர்க்க அறிவுறுத்தல் மற்றும் விவரம் கோருதல்- தொடர்பாக. |
| பார்வை | திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்39/செமதொஅ/2021 நாள்.08.07.2021 |

பார்வையில் கண்ட திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறைக்கிணங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகள், திட்டங்களால் பயன்பெறும் பயனாளிகளின் வெற்றிக் கதைகள், கட்டுரைகள் மற்றும் அரிய தகவல்களை உள்ளடக்கி செய்தி மக்கள் தொடர்புதுறையின் சார்பில் தமிழரசு செய்தி இதழ் மாதந்தோறும் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது. இதில் தற்போது மாதந்தோறும் சந்தாதாரர்களை அதிக எண்ணிக்கையில் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை அரசு/நிதியுதவி/மெட்ரிக் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் சந்தாதாரர்களாக சேர்க்க இலக்கு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது,எனவே கீழ்கண்ட விவரப்படி தமிழரசு செய்தி இதழ் சந்தாதாரர்களாக இணைந்து அதன் விவரத்தை இத்துடன் இணைத்துள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 30.07.2021 – க்குள் சார்ந்த பள்ளிகள் திருப்பத்தூர் / வாணியம்பாடி மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அனைத்து வகை பள்ளி தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் (அரசு, நிதியுதவி, மெட்ரிக்), அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் (நடுநிலைப் பள்ளிகள் மட்டும்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.மேலும் தமிழரசு செய்தி இதழை பள்ளியின் நூலகத்தில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பயன்படுத்த தக்க வகையில் பராமரிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

தமிழரசு சந்தா தொகை விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | தமிழரசு தமிழ் இதழ் ஆண்டு சந்தா | ரூ.240/. |
| 2. | தமிழரசு தமிழ் இதழ் ஆயுள் சந்தா | ரூ.2000/. |
| 3. | தமிழரசு ஆங்கிலம் இதழ் ஆண்டு சந்தா | ரூ.240/. |
| 4. | தமிழரசு ஆங்கிலம் இதழ் ஆயுள் சந்தா | ரூ.2400/. |

வங்கி வரைவோலை முகவரி "The Deputy Director (Publications) Tamil Arasu, Chennai - 2"

மேற்கண்ட தொகைக்கான செலவினம் சார்ந்த பள்ளியின் பொது வங்கி கணக்கில் மேற்கொள்ள சார்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. பெறப்பட்ட படிவத்தினை மற்றும் வங்கி வரவோலை விவரத்தை தொகுத்து 05.08.2021 மாலை 5.00 மணிக்குள் தனிநபர் மூலம் இவ்வலுவலகத்தில் சமர்பிக்குமாறு திருப்பத்தூர்/ வாணியம்பாடி மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இணைப்பு : பார்வையில் கண்ட கடித நகல் மற்றும் படிவம்

முதன்மைக் கல்வி அலுவலர்

திருப்பத்தூர்

பெறுநர்

தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் (அரசு/அரசு நிதியுதவி, /மெட்ரிக் பள்ளிகள் உட்பட) திருப்பத்தூர் மாவட்டம்

மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொகுப்பறிக்கையினை தயார் செய்து வழங்கும் பொருட்டு)

திருப்பத்தூர்/வாணியம்பாடி

அனைத்து வகை வட்டாரக் கல்வி அலுவலர்கள் திருப்பத்தூர் மாவட்டம்.

நகல்,

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கட்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

படிவம்

| வ.எண் | பள்ளியின் பெயர் முழு முகவரியுடன் (பின் கோட்டுடன்) | கைப்பேசி எண் | ஆண்டு சந்தா ரூ. | ஆயுள் சந்தா ரூ. | வங்கி வரைவோலை எண் மற்றும் நாள்(வங்கியின் பெயருடன்) |
|---|---|---|---|---|---|
| | | | | | |

002151

**" மிக அவசரம் / தனிக்கவனம்**

அனுப்புநர்

திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர் மாவட்டம்.

பெறுநர்

முதன்மை கல்வி அலுவலர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

ந.க.எண். 39/செமதொ.அ/2021, நாள்: 08.07.2021

அய்யா,

பொருள் : தமிழரசு சந்தா - தமிழரசு (தமிழ் மற்றும் ஆங்கிலம் ) இதழ் சந்தாதாரர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ள கோருதல்- தொடர்பாக.

பார்வை : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடித எண். 313/ச1/த.அ./2021, நாள்:15.06.2021.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகள், அரசின் அறிவிப்புகள், நலத்திட்டங்கள், சாதனைகள், அரசின் திட்டங்களால் பயன்பெறும் பயனாளிகளின் வெற்றிக் கதைகள், கட்டுரைகள் மற்றும் அரிய தகவல்களை உள்ளடக்கி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழரசு இதழ் மாதந்தோறும் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது. தற்போது புதிய நவீன இயந்திரத்தில் பல வண்ணங்களில் தமிழரசு இதழ் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறது. தமிழரசு இதழ்களுக்கான சந்தாதாரர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது மிகவும் அவசியம் எனவும், தமிழரசு இதழ்கள் ஒரு இலட்சம் பிரிதிகள் மாதந்தோறும் அச்சடிக்க ஏதுவாக சந்தாதாரர்களை அதிக எண்ணிக்கையில் சேர்க்க அரசு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி தமிழரசு (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இதழ்களுக்கு சந்தாதாரர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்க்கும் பொருட்டு ஜூன்-2021 முதல் மார்ச்-2022 வரை ஆண்டு மற்றும் ஆயுள் சந்தா சேர்க்க இம்மாவட்டத்திற்கு கீழ்க்கண்டுள்ளவாறு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| சந்தா | இலக்கு (Target) |
|---|---|
| தமிழ் ஆண்டு சந்தா | 500 |
| தமிழ் ஆயுள் சந்தா | 100 |
| ஆங்கிலம் ஆண்டு சந்தா | 20 |
| ஆங்கிலம் ஆயுள் சந்தா | 20 |
| மொத்தம் | 640 |

தமிழரசு சந்தா தொகைகளின் விவரங்கள் :

| | |
|---|---|
| 1. தமிழரசு தமிழ் இதழ் ஆண்டு சந்தா | ரூ.240/- |
| 2. தமிழரசு தமிழ் இதழ் ஆயுள் சந்தா | ரூ.2000/- |
| 3. தமிழரசு ஆங்கிலம் இதழ் ஆண்டு சந்தா | ரூ.240/- |
| 4. தமிழரசு ஆங்கிலம் இதழ் ஆயுள் சந்தா | ரூ.2400/- |

எனவே தங்கள் துறையின் மூலம் தமிழரசு தமிழ் இதழுக்கான ஆண்டு சந்தா ( 200 ) மற்றும் ஆயுள் ( 10 ) சந்தா மற்றும் ஆங்கிலம் இதழ் ஆண்டு சந்தா ( 10 ) ஆயுள் சந்தா ( 05 ) சேகரித்து தொகையினை "The Deputy Director (Publications) Tamil Arasu, Chennai-2 என்ற பெயருக்கு வங்கி வரைவோலையாகவோ அல்லது தொகையாகவோ பெற்று சந்தாதாரர்களின் முழு முகவரி (பின்கோட்டுடன்) சந்தாதாரரின் கைப்பேசி எண்ணுடன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைத்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

8.7.21

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருப்பத்தூர் மாவட்டம்.

3/3

08/07/21

08/07/21